"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன்முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. Registered at the G. P. O

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி | மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும் | வெகுஜன விரோதி"

மலர் 36 } யாழ்ப்பாணம் வயாவிளான், வெகுதானியஹு புரட்டாதிமீ ச-ந் ௳ (20-9-38) செவ்வாய்க்கிழமை { இதழ் 20

### தோத்திரம்

தென்னி லங்கையர் குலபதி மலைதலிந் தெடுத்தவன் முடிதிண்டோ
டன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த தலைவனுர் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே.

## வடமாகாணத்துள்ள
# சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு

(முன்தொடர்ச்சி)

சிங்கள வியாகரணம் அகராதிமுதலிய பலநூற்கு ஆக்கியோனும், சிங்களத்திலே மகா பாண்டித்தியமுடையவருமான V. M. குணசேகர முதலியாரும் மேலைச் சிங்கவென்னுஞ்சொல் ஒருசாதிமக்களையே குறித்ததென்னுங் கொள்கையுடையராம். அச்சொல் சிங்கப்பெருமாளையே குறித்ததென்னுங் கோட்கு, இலங்கையிலே புராதனமாயுள்ள (1) முனீஸ்வரம் என்னும் திருப்பதியின்பெயர் சார்பாகும்போலும். (2) (முனீஸ்வரன்—விஷ்ணு) வல்லிபுரவைபவமும் மேற்கொள்ளத்தகும். பழமையான நாததேவாலயங்கள் சிங்களநாட்டிலே இருக்கின்றமையும், பௌத்தமதத்தைத் தழுவிய சிங்களராலே பரிபாலிக்கப்பட்டு வருகின்றமையும் ஈண்டைக் கவனிக்கத்தகும் (3) நாதன்—விஷ்ணு). செங்கற்பட்டிலுள்ள சிங்கப்பெருமாள்கோயிலும், வங்காளத்திலேயுள்ள சிங்கேஸ்வர்த்தானும் சிங்கதேவன்பெயரால் விளங்குந் தானங்களேயாம்.

சிங்களம் என்பதைச் சீனர் கள்ளர் என்னும் இருசாதிப்பெயரின் சேர்க்கையா லுண்டுபட்ட நாமமெனச் சாதிப்பவர், கப்பற்பிரயாணஞ் செய்த சீனர் சிலர் கப்பலுடைந்தமையாற் சலாபத் துறையையடைந்து அந்நிலஞ் செழிப்புள்ளதா யிருந்தமைகண்டு ஆங்குக் குடிகொள்ளச் சித்தமாயினரெனவும், அபராதத்தினிமித்தம் அரசகட்டளையினாலே தமிழகத்திலிருந்து ஈழத்துக்குத் துரத்தப்பட்ட கள்ளர் சிலர் அங்கிருந்த சீனருடன் மணங்கலந்து பெற்ற மக்களே சிங்களர் எனவும் வித்தரிப்பர். இம்மங்கள காமானகதை, வங்கதேசத்து அரசகன்னிகை யொருத்தி வர்த்தகர் கூட்டத் தலைவனொருவனைப்பற்றி மகததேசம் நோக்கிச் செல்லு மார்க்கத்திலே, இலாடதேசக் காட்டின்கண்ணே யிருந்த (4) கேசரியொன்றினாற் கவர்ந்து கொண்டுபோகப்பட்டு அம்மிருகத்துக்கே சிங்கவாகுவென்னுஞ் சிறந்தவோ ராண்மகவைப் பெற்றனளென்றும், அவன் தன் தந்தையாகிய சிங்கத்தைச் சங்காரஞ்செய்தனனென்றும், அச்சிங்கவாகுவின் மைந்தன் விஜயன் இலங்கையைக் கைப்படுத்தி அரசாண்டமையின் அதற்குச் சிங்களம் (சிங்கத்தைக்கொன்றவனது நிலம்) என்னும்பெயர் ஏற்பட்டதென்றும் கற்பித்துக்கொண்ட சிங்களரது சிருங்காரகதையையே பெரிதுமொக்கும்.

சிங்களமென்பது தமிழகத்தைச்சூழ்ந்த பதினேழ்நிலத்தி லொன்றெனவும், கொடுந்தமிழ்நிலத்தைச்சூழ்ந்த பன்னிருநிலத்தி லொன்றெனவும், தொன்னூறுதேய மைம்பத்தாறிலொன்றெனவும், நன்கறியப்பட்டவோரிடத்தின் பெயராம். அவ்விடப் பெயரடியாகவே சிங்களர் என்னும் சாதிப்பெயர் பிறந்ததென்பது யாழ்ப்பாண வைபவக்காரர் முடிபுமாம். சரித்திரக்காரரும் அதற்குச் சம்மதிக்காரே. புதுச்சரித்திராசிரியர் "சிம்ஹலம்" என்பதன் பூர்வார்த்தம் பட்டை (கறுவாப்பட்டை) யெனவும் பகர்ந்துளர். அவ்வபூர்வகூற்றுக்கு லக்ஷண வைத்தியமென்பார் கோத்த சமஸ்கிருத அகராதியையே ஆதாரமாய்க்கொண்டனர்.

வைத்தியநூல்களிலே குழூஉக்குறிகளும் அருங்கருத்தமைத்த பதங்களும் பிரயோகிக்கப்படுதல் அரிதன்று. தமிழ் வைத்தியநூலோர் பூசணிக்கொடியை அணிமுலை என்பர். பூசணி என்பதற்குப் பூசு (பூச்சு, கோலச்சாந்து) (1) அணி என விபரீதமாகப் பொருள்கொண்டு அப்பொருளுக்கேற்கப் பரியாயநாமம் படைத்தனர்போலும். (கோலந்தீட்டுவது அல்லது தொய்யிலெழுதுவது மகளிர்மார்பின்கண்ணேயாம்)

சிம்ஹலம் கறுவாப்பட்டையாற் சிறந்தவிடமாதலின் அப்பட்டையைச் சிங்ஹலமெனல் அதிசயமன்று. அவ்வகை வழக்கைத் தமிழ்நூலோர் இடவாகுபெயரென்பர். சிம்ஹலம் என்னுஞ்சொற்குப் பட்டை (கறுவாப்பட்டை) யென்னும் பொருளைச் சாதாரண சமஸ்கிருத அகராதிகளிற் காண்பதரிதாம். அச்சொல்லை அப்பொருளிலே சம்ஸ்கிருத இலக்கிய நூல்களிலே காண்பதும் அசாத்தியமேபோலும். பட்டையே அதற்குப் பழம் பொருளெனின், அப்பொருள் அப்பதத்திற்கு எவ்வாறெய்தியதென்று மூலார்த்தம் காட்டி விளக்குதல் முறைமையன்றோ? அன்றேல் பண்டைப்பனுவல் வழக்கெடுத்துரைத்தல் மரபன்றோ? அபூர்வார்த்தமாதலின் ஒன்றேனுஞ்செய்தல் ஆவசியகமேயாம்.

ஆசிரியர்மேற்கொண்ட ஆரியவர்த்தியர் மதத்தைத்தழுவுதல் தகுமெனின், சீனம் என்பதை அத்தேயத்துச் சிரியபண்டமாகிய சீனியாலே வந்தபெயரெனவும், வங்கம் என்பதை அத்தேயத்தினின்று தொல்லைத் தமிழகத்துக்குப் பாய்வலித்தோடிப் பண்டமாற்றுச்செய்துவந்த வங்கத்தினாலே வந்தபெயரெனவும் கலிங்கம் என்பதை அத்தேயத்திலே பண்டு நெய்துவந்த கலிங்கத்தினாலே வந்தபெயரெனவும், ஈழம் என்பதை அத்துவீபத்திலே பொலிந்து விளங்கும் தென்னை பனை முதலிய மரங்கட்கும் இழும்பொருளாகிய ஈழத்தினாலே வந்தபெயரெனவும், 'சிலோன்' என்பதை ஆங்கு வடிக்கப்படும் வெறிப்பதார்த்தமாகிய (1) சிலோனினாலே வந்தபெயரெனவுஞ் சாதித்தல்தானும் தகும்.

இதுநிற்க, சிங்களர் என்னுஞ் சொற்கு முதற்பொருள் சிங்களதேசத்திற் குடியிருப்பவர் என்பதேயாம். சிங்கர் எனப் பெயரியவொரு மக்கட் குழாத்தினாலே சிங்களமென்னும்பெயர் வந்ததாயின், அச்சிங்கரையுள்ளிட்டு அவ்விடத்திற் குடியிருந்த மக்களனைவரும் (2) ஆதிச் சிங்களராவர். அவ்வாதிச்சிங்களரை மேற்கொண்டேனும் அவரோடு மணங்கலந்தேனும், ஆங்குப்பின்னுளிலே தலைப்பட்ட பிறிதொரு சாதிமக்களும் சிங்களரெனவே அறியப்படுவர்.

பொருளமைதியளவிலே, சிங்களர் என்பதும் அமரிக்கர் என்பதும் ஒத்த சொற்களாகும். அமரிக்கர் என்னும் பதம் முதற்கண் அமரிக்காக் கண்டத்துச் சுதேசிகளையும், பின்னர் அத்தேயத்தைக் கைப்படுத்தி ஆங்கு வசித்த ஐரோப்பிய வம்சத்தாரனைவரையும், ஈற்றிலே சுவராச்சிய மேம்பாடுடையோராய், வடஅமரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணத்தின் மாத்திரம் வசிப்பவரேயாகும் ஐரோப்பிய வம்சத்தாரையுங் குறித்தமை காண்க.

ஆங்கிலவரசைக் கைவிடாது கனடா தேசத்திலே வசிக்கும் ஐரோப்பிய சந்ததியார் கனேடியர் என்றே யறியப்படுதலும், அமரிக்கரென்று அறியப்படாமையுங் கவனிக்கத்தகும்.

(தொடரும்)

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்.



துதி வெண்பா

ஞானஞ் சுகநிதியம் நல்லாயுள் தாவயவை
ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்
பேர்க்குமர னச்சியந்த்ரம் பீடுபெற்றுநிற்
சேர்த்தியுடன் வந்து செகம் [கவெற்குச்


சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்

வெகுதானியஞு புரட்டாதிமீ சஉ


## கடவுளும், காலமும்

அருட் பெருங் கருணைவள்ளலாகிய கடவுள் மனுஷராகிய எம்மையும் மற்றும் சீவராசிகளையும் படைத்துக் சாத்துக்கொண்டிருக்கும் தொழிலில் ஒருகணமேனும் ஓய்வு உறக்கமின்றி யிருந்துவருகிறுரேன்பது உண்மையாகும். பிறப்புகளுள் மிகவும் விசேட முடையராய், பகுத்தறிவுடையோராய்க் காணப்படும் மனுஷருட் பெரும்பாலார் கடவுளை நினைக்கவும், அவரைத் துதிக்கவும், அருகராகாதும், நேமில்லாதும் இருந்து எதுவோ தங்களுக்குத் தெரிந்த தொழில்களையாற்றிவிட்டு, உண்பதும் உறங்குவதிலுமே யிருக்கிறுர்கள். இவர்களை நல்வழியிலும் தீயவழியிலும் நடத்துவதற்குக் காலம் என்னும் ஒரு அதிகாரியையும் நியமித்திருக்கின்றுர். காலம் தான்நினைத்தகருமங்களையே, தன்னெல்லைவந்துசேரும்வரை செய்வித்துக்கொண்டிருக்கின்றது.

செல்வம், வறுமை, மதிப்பு, மதிப்புக்கேடு, துக்கம், சந்தோஷம் யாவும் அவரவர்கள் செய்துகொண்டிருக்கும் வினைக்கீடாகவே யுண்டாகிக் கொண்டிருப்பதை, ஞானவான்கள் உணர்ந்து நடப்பதையும், அஞ்ஞானிகள் அசட்டைசெய்து கெட்டலைந்து போவதையும், நாம் யுத்தி, சுருதி, அனுபவம் என்னும் மூன்றினுலும் அறிந்துகொண்டு வருகின்றேம்.

நன்மை இது; தீமை இது என்னும் விஷயங்களை யெவர்தாம் அறியாதிருக்கின்றுர். அறிந்தும் அனுபவித்தும் தாம் தாம் தெரிந்தவற்றையே செய்துகொண்டிருப்பாரைக் காலமே காட்டும். விருப்பு வெறுப்பில்லாத கடவுள் என்னும் காருண்ணியர் இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டும், முடிவில் அவரவர் செய்த நன்மை தீமைகளை உரைத்து நிறுத்து அதற்குரிய விலைமதியைக் கொடுத்துத் தீர்த்துக்கொண்டும் வருகிறுர்.

தம்மால் நியமிக்கப்பட்டு மனுஷரை வழிநடத்தும் காலம் என்னும் அதிகாரி நம்மனேரை முன்விட்டுத் தான் பின்சென்று அவரவர் கோலத்துக்கும் திசைக்கும் இசைந்து கொள்ளுகிறுன். ஒரு மனுஷனுக்கு வெள்ளிதிசையாம் என்றுல் அத்திசை முடியும் வரையும் காலம் அவனுடன் நின்று பெரிய கூத்துகளையெல்லாம் ஆட்டுகிறுன். சனிதிசையாமென்றுல் அவனுடன் நின்று அவனை வெறுவிலியாக்கி ஊரைவிட்டு ஓட்டுகிறுன். பட்சபாதகமில்லாத கடவுளோவென்றுல், நல்லவனே? கெட்டவனே அவனுடன் காலத்துக்குப் பக்கமாகவே செல்கிறுர். காலம் என்னும் அதிகாரி செய்யும் நன்மைகளையும் தீமைகளையும் பார்த்து அன்பர்களாயுள்ளார்க்கு வரும் வேதனைகளைச் சற்றுப்பொறுதிசெய்யும்படியும், வன்பர்களாயுள்ளார்க்குவரும் வேதனைகளைக் கண்ணுற்பாராதும் கூடிப் போகின்றுர். காலத்தின்எல்லைமுடிந்தால், வெள்ளிதிசைகாரன் பாடு வேறு திசையாகவும், சனிதிசைகாரன்பாடு வேறுதிசையாகவும் மாறிவிடுகிறது. இக்காலத்திற்றுன் அவரவர் செய்த புண்ணிய பாவங்களின் பலனை அவர்களும் மற்றவர்களும் அறியத்தக்கதாகும்.

ஒரு காலத்தில் முடிசார்ந்த மன்னரேன்றிருந்தார் பலர் சிலகாலத்தின்பின் மிடிசார்ந்து அலைகின்றுர். இதுபற்றியே "குடை-நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர், நடைமேலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்" என்றும், "அறத்திடுபிச்சை கூவியிரப் போர் அரசோடிருந் தரசாளினுமாளுவர்" என்றும் ஆன்றேர் கூறிப் போந்தனர்.

விட்டகுறையினுற் கிடைத்த மனுஷயாக்கையை எடுத்த நாம் எவ்வாறு நடக்கவேண்டும்; யாது செய்யவேண்டும்; யாரைத் துதிக்க வேண்டும் என்னும் இவைகளையறியாதிருப்பின் மனுஷவரியில் இருக்குந் தகைமை எமக்குண்டாகுமோ? தருவதுயார்? என்பன கேள்விக்கிடம். காரியமிப்படியிருக்க:— தோட்டகுறையினுற் சூழ்வனவெல்லாஞ்செய்து மமதைகொண்டு, மனச்சாட்சியையிழந்து, மனுஷத்தன்மையற்று, மிருகவடிவமாகின்றுன். அக்காலத்தில் இந்த நாட்டுமிருகத்தைக்கண்ட காட்டுமிருகமும் ஓட்டமே பிடிக்கும்.

ஆணவமேன்னுங் காலினுல் நடந்து, அஞ்ஞானமேன்னு மிருட்டறையிற்சென்று, ஆசையேன்னுங் கையை நீட்டுகிறவர்கள், கடவுளையும் அறியார்; காலத்தையும் அறியார்; மனச்சாட்சியையும் அறியார்; மனுஷரையும் அறியார்; பாவபுண்ணியத்தையும் அறியார். வெல்வதே கருமம் என்று நின்று தொழில்களையாற்றியழிவர்.

ஆதலால் ஆன்றேர் கூறியபடி கடவுளைத் துதித்து உய்ய வழிதேட முயல்வதே பிறப்பின் சிறப்பாகும்.

"ஆதியீ றில்லான் றன்னை
யமைத்தகா ரணமோன் றில்லான்
சோதிலான் கணத்து ளண்டங்
கோடிசெய் தழிக்க வல்லான்
ஓதிடு மோப்போன் றில்லா
னுருவிலா னிருவிண் டங்குஞ்
சோதிதன் னிழலாக் கோண்ட
சோதியைத் துதியாய் நேஞ்சே"

"ஆணலன் பெண்ணு மல்ல
னஃறிணை யலன்பா ரல்லன்
சேணலன் புனல்கா லல்லன்
றீயல னம்பு லத்தாற்
காணரும் வடிவ னித்தன்
கத்தனம் மத்தன் சுத்தன்
மாணற முருக்கோண் டன்ன
மாட்சியான் கடவு ணேஞ்சே."

"தரைபேலா முளன்று ரும்பு
தன்னினு முளன்ண் டாண்ட
நிரையெலா முளன்மெய் யாவி
நேஞ்சுளு முளனி யம்பு
முறையெலா முளன்றுன் மேவி
யுறைபோருள் கேடக்கோ டாதன்
புரைதபு தன்னைத் தானே
போருவுவோ ஞெருவ னன்றே."

காலநிலை

மழையில்லை, வெயிலகோரந் தாங்கரிது.

## இலங்கை சேமநிதிப் பத்திரங்கள்

இம்மாதம் (19-9-38) திங்கட்கிழமைதொடக்கம் தபாற்கந்தோர்களில் மிச்சப்பணங்களைச் சேமித்து வைப்பதற்கேற்ற புதிய ஒழுங்குகள் செய்யப்பெற்றிருக்கின்றன. கட்டும்பணம் கட்டியவர் திரும்பக் கேட்கும்போது திருப்பிக்கொடுக்கப்படும். முதலுக்கும் வட்டிக்கும் அரசாட்சியாரே பொறுப்பாளிகள். விபரங்கள் எந்தத் தபாற்கந்தோர்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கையில் பூகம்பம்

சென்ற (9-9-38) சனிக்கிழமை இரவு நான்கு மணியளவில் இலங்கையின் தென்மேற்குப் பாகத்தில், பூமியதிர்ச்சி (பூகம்பம்) ஏற்பட்டது. இவ்வதிர்ச்சி சாமானியமாயும், சிறிதுநேரத்துக்கும் உண்டாயதால், உயிர்ச்சேதம் நட்டம் முதலியன ஏற்படவில்லை. மற்றைய தேசங்களைப்போல் பூமியதிர்ச்சி ஏற்படாமலிருக்கும் நாடாகிய இலங்கையிலும் இவ்வித சம்பவம் ஏற்படுவது பெரிய அதிசயம். இற்றைக்கு இருபத்தைந்தாண்டுகட்குமுன் உண்டான பூகம்பத்திலும் பார்க்க இம்முறை ஏற்பட்டது சிறிது கூடியதெனத் தெரிகிறது.

## 5700 ரூபா தபால் பை

இம்மாதம் (7-9-38) புதன்கிழமை கொழும்புப் பெரிய தபாலாபீசிலிருந்து தெமோதரைத் தபாற்கந்தோருக்கு அனுப்பப்பட்ட 5700 ரூபா நோட்டுகள், 1150 பெறுமதியான தபால்முத்திரையொட்டிய என்வலப்புகள் முதலியவற்றைக்கொண்ட ஒரு பதிவுசெய்த தபால் பையைக் காணவில்லையாம். இதையிட்டுப் பொலீசார் விசாரணைசெய்து வருகின்றனர்.

## வயாவிளான் வாலிபர் சங்கம்

### பாரதி தினம்

மேற்படி சங்க ஆதரவில் நிகழும் வெகுதானியஞு ஆவணிமீ உகூ-ந்உ (11-9-38) ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணியளவில் வரகவி சுப்பிரமணியபாரதி திருநாட்கொண்டாட்டத்தை முன்னிட்டு மேற்படியூர் அமெரிக்கமிஷன் பாடசாலை மண்டபத்தில், கோப்பாய் அரசினர் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் திரு. ம. வே. மகாலிங்கசிவம் அவர்களின் தலைமையின்கீழ், தென்மயிலை ஆசிரியர் திரு. க. செந்திநாயகம் அவர்களால், "பாரதியாரும், தமிழ்நாடும்" என்னும் விடயம்பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. பின்னர் ஆசிரியர் திரு. சி. இராமலிங்கம், மாணவன் திரு. ச. செல்லத்துரை என்னுமிருவரும் பாரதியாரின் சில பாடல்களைப்பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். ஈற்றில் தலைவரவர்கள் முடிவுரை பகர்ந்ததும், காரியதரிசியால் யாவர்க்கும் வந்தனங் கூறப்பட்டதும் இரவு 9 மணியளவில் தேவாரத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## வல்லிபுர ஆழ்வார் கோவில் உற்சவம்

இக்கோவிலில் புரட்டாசிமீ உகூ-ந்உ ஞாயிற்றுக்கிழமை சமுத்திரதீர்த்தம் நடைபெறும்.

## பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லின் ஜெர்மனி விஜயம் சமாதானமே பிரதான இலட்சியம்

சென்ற 15-ந் திகதி வியாழக்கிழமை பிரித்தானிய முதன் மந்திரி திரு. நெவில் சேம்பர்லின் அவர்கள் ஜெர்மனிய சர்வாதிகாரியாகிய ஹெர்-ஹிட்லரைச் சந்திக்க ஆகாயவிமான மூலமாகப் பறந்து சென்றனர். இவர் சென்றதன் நோக்கம் யுத்தத்தைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆலோசிப்பதற்கேயாகும். ஐரோப்பாவெங்கணும் யுத்த கர்ச்சனை நடந்துவரும் நெருக்கடியான இத்தருணத்தில் பிரதம மந்திரியார் சென்றிருப்பது மிகவும் போற்றற்குரியதாகும். இவர் சென்றதன் முடிபு இன்னுந் தெரிந்திலது.

## ஆங்கில பாஷையின் மகத்துவம்

இவ்வுலகில் மொத்தமாகவுள்ள 1790 பாஷைகளுள் ஆங்கிலப்பாஷையே அதிகமான மக்களால் பேசப்பட்டு வருவதுடன், முதன்மை ஸ்தானமும் பெற்றிருக்கின்றது. இப்பாஷையை 24 கோடி மக்கள் பேசுகின்றனராம். அடுத்தபடியாக இடம்பெறுவது ஜெர்மன் பாஷையெனத் தெரிகிறது.

## மோட்டார் விபத்து

சென்ற (10-9-38) சனிக்கிழமை இரவு தளுவாக்கொடுவா என்னுமிடத்தில் மிகவும் பரிதாபகரமான மோட்டார் விபத்து நடைபெற்றது. விபரம் பின்வருமாறு:— குருநாக்கல் நியாயதுரந்தரர் திரு. வீரதுங்க அவர்களும் அவர் பாரியாரும் மோட்டார் வண்டியில் குருநாக்கல் மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தபோது தளுவாக்கொடுவா என்னுமிடத்திற் கருகாமையிலுள்ள பெற்றேல் நிலையத்திற்கு எதிராகவுள்ள தெரு வளைவான இடத்தில் கொழும்புநோக்கிச் சென்ற ஒரு காருடன் மோதிக்கொண்டதால் நியாயதுரந்தரரின் மனைவிக்குக் காயங்களேற்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும் அங்கே இறந்துவிட்டதாகவும் தெரிகிறது. தம்பதிகள் இளந்தம்பதிகளென அறியக்கிடக்கின்றது.

## தேசாதிபதியின் பாரியாரது தாயார் மரணம்

இலங்கைத் தேசாதிபதி அன்ட்று கல்டிகொற் அவர்களின் பிரிய பத்தினியாரின் தாயார் ஸ்ரீமதி. எடித் இன்ஸ் அவர்கள் இம்மாதம் 8-ந் திகதி லண்டனில் இறந்துவிட்டதாக ஓர் செய்தி யெட்டியிருக்கிறது. மலாயாவில் முன்னெருபோது நீதிபதியாயிருந்த திரு. G. R. இன்ஸ் அவர்களின் மனைவியாவர்.

## பிரபல வித்துவான் ஸ்ரீமத். கா. கந்தையாபிள்ளை அவர்கள்

ஸ்ரீ மு. மு. ராம நல்லகருப்பன் செட்டியார்

மலேயாவின் பழையகால நண்பரும் கிள்ளானுக்கு தற்போதுள்ளவர்களில் ஆதியானவரும் எனது பிராண சிநேகிதருமாகிய பெரியார் ஸ்ரீமத். கா. கந்தையாபிள்ளை அவர்கள் இரண்டொரு நாள் நேர்ந்த அற்பமான ஹிருதய நோவு காரணமாக 1-9-38உ பகல் 12-30 மணி சுமாருக்கு சுல்த்தான் ஸ்திரீட்டிலுள்ள தமது புஸ்தகக் கடையில் உணவு அருந்த எத்தனிக்கும் சமயம், மயக்கமுற்று கீழே விழுந்து, விழுந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் இறைவன் திருவடியை அடைந்தனர் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் துக்கமுற்றனன். பெரியார் மரணத்தருவாய் வரையிலும் மற்றவர்களுடைய உதவியை நாடாது நல்ல நடையுடன் இருந்து திடமென ஒருவருடைய பேச்சு வச்சுக்கும் மனக்கசப்புக்கும் இடம்வையாது உயிர்நீத்தார். இதுவே இவருடைய நிராசையான மனப்போக்குக்கு கடவுள் கொடுத்த நல்வழியாகும். இந்த அளவில் இவர் மகாபுனிதரென்று சொல்வதில் எள்ளளவும் பிசகில்லை. அன்பரின் ஆவிபிரிந்த செய்திகேட்ட கிள்ளான் மக்கள் அனைவரும் ஓடோடியும் வந்து கடைசி முறையாக அவருடைய முகாரவிந்தத்தைக் கண்டு அவருக்கு சில வினாடிகளில் ஏற்பட்ட வீரசுவர்க்கத்தைப்பற்றி வியந்து பேசினர். கனம் கந்தையாபிள்ளையிடம் எனக்குப் பெரும் மதிப்புண்டு. 16 ஆண்டுகள்வரை அவருடன் பழகியிருக்கிறேன். நிறைந்த அறிவாளி. பெரிய பண்டிதர். யார் எதைக்கேட்டாலும் மறுமொழி சொல்லக்கூடிய மாண்புடையவர். அடியேன் ஏதேனும் தெரிந்துகொள்ள வேண்டி நேரும் சமயங்களில் அவரிடம் சென்றுதான் சந்தேகநிவிர்த்தி செய்துகொள்வது வழக்கம். பத்திரிகைத் தொழிலிலும் உலகானுபவத்திலும் பயிற்சி மிக்காரானதால் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களையும் ஆய்ந்து பார்த்து சென்றகாலம் நிகழ்காலம் எதிர்காலங்களைச் சொல்லும் ஆற்றலுள்ளவர். இத்தகைய பெரியாரின் உதவி எனக்கும் என் சகோதரர்களாகிய சிலோன் இந்திய மக்களுக்கும் மிகவும் வேண்டற்பாலதாயிருந்தது. என்செய்வது கடவுள்சித்தம் மாறுபிற்று.

### பெரியாரின் வாழ்க்கைச் சரித்திரம்

ஸ்ரீமான் கந்தையாபிள்ளை, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வண்ணார்பண்ணை என்னும் ஊரில் உயர் சைவ வேளாளர் குடும்பம் ஒன்றில் 1871-ம் ஆண்டு ஜனனமானவர். தமது சிறு பிராயத்திலே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்துக் கல்லூரியில் ஆங்கிலமும் தமிழும் கற்றுச் சில வருடங்களுக்குப் பின்னர் புலவர் பெருமக்களால் கொண்டாடப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் மாணாக்கர் ஒருவரிடம் உயர்தரக் கல்விகற்று, தன் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப் பாஷையை முதன்மையாகக் கொண்டு தமிழில் மிகவும் திறமை வாய்ந்த ஓர் தமிழ்ப் பண்டிதராய் விளங்கி வந்தார். பின்னர் முதன் முதலாக 1896-ம் ஆண்டில் கிள்ளான் பி. டபிள்யூ. டி. இலாகாவில் மிஸ்டர் சி. என். ஸ்பூனர் என்ற பிரிட்டிஷாரின் கீழ் சிலகாலம் வேலைபார்த்துத் திரும்ப அவ்வேலையை விட்டு விலகித் தாமாக ஏதும் தொழில் செய்யக் கருதி, சொந்தத்திலேயே அச்சியந்திரசாலை ஒன்றை நிறுவி அதற்குக் கிள்ளான் அச்சியந்திரசாலை என நாமமிட்டு மிகவும் திறமையுடன் நடத்தி வந்தார். பின்னர் புத்தக ஷாப் ஒன்றும் நிறுவினார். 1906-ம் ஆண்டில் இந்துக்கள் தொழுவதற்கான சுப்பிரமணிய ஸ்வாமி கோவிலும், 1911-ம் ஆண்டில் ஓர் தமிழ்ச்சங்கமும் இவரால் ஸ்தாபிக்கப்பட்டன. இத்துடன் "வித்தியா பாஸ்கரன்" என்னும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றையும் நடத்திவந்தார். அப் பத்திரிகை 13 ஆண்டுகள்வரை நீடித்திருந்தது. அதன்மேல் மலேயாவின் கண்ணுள்ள சகல தமிழ்ப் பாடசாலைகளுக்குமுரிய இலக்கண இலக்கிய காவியங்களையும் தமிழ் நாவல்களையும் இந்தியாவிலிருந்து வரவழைத்ததுமன்றி, கிராமபோன் பெட்டிக்கு உதவியாகச் சங்கீதத் திரட்டு என்னும் பாடல்களையும் இன்னும் சில நூல்களையும் தாமாகவே இயற்றியும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழுக்காகவும் பெரிதும் தொண்டு புரிந்திருக்கிறார். இலங்கை இந்தியா நாடுகள் தவிர தென்னாப்பிரிக்காவிலுள்ள தூர தேசங்களுக்குங்கூடத் தமிழ்ப் புத்தகங்கள் அனுப்பிக்கொண்டு வந்தார். மேலும் தற்போது பிரபலம்பெற்று விளங்கும் "தமிழ் நேசன்" என்னும் பத்திரிகைக்குச் சிலகாலம் ஆசிரியராகவும் இருந்தார். இத்துடன் நில்லாது தமது வயோதிக காலத்திலே மலாயா சரித்திரம் என்னும் ஓர் நூலையும் தமிழில் இயற்றினார். இவர் அடக்கம் அமைதியோடு எப்பெருங் காரியத்தையும் ஆற்ற வல்ல கரும வீரனாகவும் எச்சபையிலும் எவ்விஷயத்தையும் எடுத்தவுடன் பேசும் திறமை வாய்ந்தவராயும், அஞ்சாநெஞ்சம் படைத்தவராயும் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவராயும் விளங்கினர். திரண்ட ஐஸ்வரியம் இல்லாதவராயினும் எவர்க்கும் கோணாது கொடுக்கும் குணசீலர். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பெரியாரின் பிரிவு குறிப்பாக எனக்கும் சிறப்பாக இங்குள்ள தமிழ் மக்களனைவருக்கும் ஈடுசெய்ய முடியாததோர் பெரும் நஷ்டமாகும்.

2-9-38 மாலை 4 மணி துவக்கம் புக்கிட் ராஜா ரோட்டு மூக்கால் மைலிலுள்ள ஸ்ரீ எஸ் செல்லத்துரை இல்லத்தில் வைக்கப்பெற்றிருந்த பெரியாரின் சவத்திற்கு, கோலாலம்பூரிலிருந்து வரவழைத்த சைவக்குருக்கள் இருவரால் சைவசமய ஆசாரப்படி சகல சடங்குகளும் செய்து வைக்கப் பெற்று 5 மணிக்கெல்லாம் அழகிய பேழையில் அடக்கம் செய்து அதற்கென மல்லிகை மலர்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்த வண்டியில் வைத்துத் தேசியக் கொடிகளோடு சகல மதத்தினருமடங்கிய நூற்றுக் கணக்கான அன்பர்கள் பின்தொடர, தேவாரக் கோஷ்டியுடன் வண்டி தென் திசையை நோக்கி மெல்லென நகர்ந்து வண்டி மயானம் செல்லுமட்டும் வந்த அன்பர்கள் பின்தொடர்ந்தே வந்தனர். வழியில் பெரியாருக்காக கடை அடைப்பு செய்திருந்த ஒவ்வொரு கடைக்கு முன்னும் பிரேத வண்டியை நிறுத்தி பதில் மரியாதை காட்டப்பெற்றது. பிரேத வண்டிக்கு இருமருங்கிலும் வாழைப் பட்டையை வைத்து சூடம் கொழுத்திக் கொண்டே வந்தனர். வண்டி மயானத்தைக் கிட்டியதும் பேழையை இறக்கி, காஷ்டத்தின் மீது வைத்து அங்கும் முறைப்படி சகல சடங்குகளும் செய்து ஸ்ரீ கந்தையாபிள்ளையின் சகோதரி மகனாகிய ஸ்ரீ பொன்னம்பலத்தாரால் தகனக் கிரியைகள் யாவும் நடைபெற்றன.

ஆவியோடு காய மழிந்தாலும்
மேதினியில்
பாவியென்ற நாமம் படையாதே
மேவிய சீர்
வித்தார மூங்கடம்பும்வேண்டாம்
மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி-

என்னும் பெரியாரின் வாக்குக்கு இலக்காக நடந்த இப்பெரியாரை கௌரவிப்பான் வேண்டி இவருடைய அறிவுத் திறமையை மெச்சியும் தொழில் துவங்க ஆரம்பித்த காலம் முதல் சாகும்வரை சோம்பலில்லாது ஏதேனுமொரு தொழிலைச் செய்து ஜீவனம் செய்தாரென்ற அளவிலும் இவர் விசேஷத்துவம் வாய்ந்தவரென்ற காரணங்களைக் கொண்டுதான் நூற்றுக் கணக்கான அன்பர்கள் விஜயம் செய்திருந்தனரென்பது குறிப்பிடத் தக்கது.

பெரியார் ஆன்மா சாந்தி அடைக.

## ஸ்ரீமான். மு. இராமநாதன் பரிஸ்டர் அவர்கள்

யாழ்ப்பாணம் புத்தூர் வாசரும், பிரபல பிரபுகுலதிலகரும், தருமகுணசீலரும், நாற்றிசையினரும் போற்றும் பற்பல செல்வங்கள் நிறைந்து, சிறந்து, கிரிதீபம் போல விளங்கும் நம்புதுவை நகரில் உள்ளவர்க்கெல்லாம் நல்ல பரோபகார காரணமாய் ஆகவேண்டிய புண்ணிய உதவிகள் புரிந்தவரும், பன்னிருவருஷகாலம் புத்தூர்க் கிராமச்சங்கத் தலைவராக விருந்தவருமான இவர்: தமக்குற்ற நோய் காரணமாக, இந்தியா என்னும் திவ்வியதலத்தில் சிவபதமெய்தினர். இவரையிழந்து துன்புறும் உறவினருடன் நாமும் மிக அனுதாபமுறுகிறோம். புத்தூர்க் கிராம சங்கத்தாரும் அனுதாபக்கூட்டம்நடத்தினர். (மு இ.) இப்பிரபுவின்பிரிவைக்குறித்துத் துயரடையும், உறவினர் அன்பர்களுடன் எமது அனுதாபமுமிருக்கிறது.

நல்லாரும் மன்னவரும் நாடுஞ்
சபைப்பழக்க
மில்லாரும் செல்வர்களு மேத
நிறை—பொல்லாரும்
பூதலத்திற் போற்றியன்பு பூண்ட
புகழ்ராம
நாதன்பூ விட்டான் நயந்து -பத்.

## பலாலியிற் கத்திவெட்டு

மூலைவையிலிருந்து, பலாலிக்குக் கள்ளுக்குடிக்கச்சென்ற ஒரு மனுஷனுக்கும், அவ்விட்டிற் கள்ளுவிற்போனுக்கும், ஏதோ கதையுண்டானபோது, கள்ளுக்கொடுத்தவன் குடித்தவனை அடித்தானென்றும், அடிபட்டவன் அடித்தவனுக்கு. விலாவிலும் கைமூட்டிலும் கத்தியால் வெட்டிக் காயமுண்டாக்கி விட்டானென்றும் கேள்விப்படுகின்றோம்.

## திரு பி. மோசேஸ், ஜே. பி. அர்ச் பேரிய கிறகோரியாரின் நைற்பட்ட அளிப்புவிழா

யாழ்ப்பாண வாசரும், பிரபல பிரமுகிதமுற்று விளங்கியவரும், சற்குணம் நேர்மையாதியாம், சுகுண லட்சணங்களொருங்கேயமையப்பெற்றவரும், பரிசுத்த கொஞ்சேச்சி மாதாவின் ஆசனக் கோவில் பிரதம மூப்புமாகிய திரு பிலிப் மோசேஸ், ஜே. பி அவர்கள் திருச்சபைக்கு ஆற்றியுள்ளமகத்தான தொண்டுகளைப் பாராட்டிப் பரிசுத்த பிதாவாகிய பதினொராம் பத்திநாத பாப்பரசர் பரிவாகச் சன்மானித்த அர்ச்: பெரியகிறகோரியாரின் மகிமைவாய்ந்த நைற்பட்ட அளிப்புவிழா, வைபவங்காரணமாக, நம் மேற்றிராசன மண்டபமானது, சென்ற 11-ந்திகதி ஞாயிறன்று அழகுறச் சிங்காரிக்கப்பெற்றுத் தேசோமயமாய் அளித்துநின்ற அலங்காரக் காட்சியோ செப்புந்தரமன்று. அத்தருணம் பல குருப்பிரசாதிகள், பிரதம அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பட்டின் பரிபாலனசங்க அங்கத்தவர்கள் மற்றும் பிரபலஸ்தர்கள், பெண்மணிகள் முதலானோரின் சமுகத்திலே பட்ட அளிப்புவிழா பெரிதும் பரிமளிக்கலாயிற்று, எட்டுமணியளவில் புதிய நைற்பட்ட வர்த்தனரான் சிவாலியர் பிலிப் மோசேஸ் அவர்கள் யாழ்ப்பாணத்திலே காலங்கண்ட பெருந் தமிழ் மகனாகிய அதிகார் ஏ. நாகநாதர் அவர்களோடும், தமது அரிய சகோதரராகிய இராசமாளிகை வாசல் முதலியார் பி. ஜே. இராசா அவர்களோடும் மோட்டர் ரதாரூடராய் மேற்றிராசன மாளிகை முன் வந்திறங்கவே ஆங்கு சமுகமாயிருந்த பிரமுகர்கள் அனைவரும் அவரைப் பெருமகிழ்வுடன் வரவேற்று நின்றனர். நம் மேற்றிராணியாண்டவர் அவ்விடம் எழுந்தருளி நடுவிடமாய் உயராசனத்திலமர்ந்தும்விக்கார் ஜெனரலாகிய மகாவண. ஜே. எமிலியானுஸ்பிள்ளை சுவாமியார் நைற்பட்டத்துக்கான பாப்பரசரின் அதிகார பத்திரத்தைப் பிரசித்தமாக லத்தீன்பாஷையிலும், பின்னர் ஆங்கிலபாஷையிலும் வாசித்துக் காட்டினர்.

அதன்மேல் நம்மேற்றிராணியாண்டவர் அப்பத்திரத்தைப் புதிய நைற்பட்ட வர்த்தனரிடம் அளித்து, அதற்குரிய அழகிய சின்னத்தையும் அவரது மார்பங்கியிலே அணிந்து, அவரின் குணாதிசயங்களையும் அவர் செய்த செய்கின்ற ஞானத்தொண்டுகளையும், எல்லோர்க்கும் மேல்வரிச் சட்டமாயிருக்கிறரென்றும், இவரின் அரிய பெரிய செய்கைகளைப்பற்றிச் சகலருமறிந்த விஷயமென்றும், அவர் ஓர் உத்தம நகரவாசி என்பதை ஆசினர். நன்கறிந்து அவருக்குச் சமாதான நீதவான் என்ற பட்டமளித்திருக்கின்றனரென்றும், சொற்பொழிவாற்றினர்.

அதன்பின் மாஜி டிஸ்திறிக் நீதிபதியாகிய திரு. ஏ. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் இவரின் நடவடிக்கைகளைப்பற்றியும், இவர் செய்கின்ற அரிய தொண்டுகளைப்பற்றியும் வெகுநேரம் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் சிவாலியர் மோசேஸ் அவர்கள் டிஸ்திறிக் நீதிபதியாகிய திரு. சி. குமாரசாமி அவர்களாலும், பிறராலும், புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று ஆனந்த வாழ்த்துகள் மத்தியிலே தமது கிருகத்துக்குச் சென்றனர். அன்றும் அடுத்த தினங்களிலும் பெரியோர், சிறியோர், செல்வர் வறிஞரென்ற பேதமின்றிப் பலரும் அவரைச் சந்தித்துச் சோபனங்கள் கூறித் திரும்பியவண்ணமிருந்தார்கள். சிவாலியர் மோசேஸ் அவர்களின் பிரிய பாரியாரது சுபமிருத்தின் காரணமாய் பிரசித்த கொண்டாட்டம் எதுவும் நிகழவில்லை. அரிய பெரிய நைற்பட்ட வர்த்தனர் நீடூழி வாழ்க. எம்பெருமான் அருள்புரிவாராக.

V. M. S.

உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.

கதைப்பகுதி

# சுந்தரன்செய்த தந்திரம்

(முன்தொடர்ச்சி)

"துளசிக்கு மணமும் முள்ளுக்குக் கூர்மையும் தொடக்கத்திலேயுண்"டாதலால் சுந்தரனுந் தன் சொந்தத் தந்திரயுத்தியைக்கொண்டு போகும்போது சோமநாதபிள்ளை வீட்டிலில்லாத தருணத்தையறிந்து முன்போல வேஷம்பூண்டு முன்மிதியடிமேல் வந்துநின்று "அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமு"மாய் அடியம்மா உனக்கு ஒரு நற்செய்தி கொண்டுவந்திருக்கிறேன், தாக்கியாமல் இங்கேவாவென்று கூப்பிட்டான். அத்தருணம் சோமநாதபிள்ளையின் மனைவி தன் மகள் ஆண்டனுபவித்த பொருட்களைப் பார்த்துத் துக்கித்துக் கடவுளை நொந்துகொண்டிருந்த சமயமாயிருந்தது. அவள் இச்சத்தத்தைக் கேட்டதும் மயிர்சிலிர்த்துத் திடுக்கிட்டு அதாரென்று பார்க்க வெளியேவந்தாள். அத்தருணம் சுந்தரனின் உருவத்தைக்கண்டாள். காணவே முன்வந்துபோன சாமியாரென்று அறிந்துகொண்டாள். உடனே ஓடிப்போய் அவன் பாதத்தில் விழ்ந்து ஸ்மரணையற்றுக் கிடந்தாள். அத்தருணம் சுந்தரனே "உரலுக்குட்பட்ட பண்டம் உலக்கைக்குத் தப்புமோ" வென்றுன்னி மிகு சந்தோஷவசத்தனாகிப் பயப்படாதே, உனது மகளுக்காகக் கவலைப்படுகிறாய்! அவளுக்கு ஒரு குறையுமில்லை. நடந்தசங்கதி உனக்குத் தெரியாதிருக்கலாம். உங்கள் ஆத்திரத்தை ஈஸ்பரன் அறிந்து உங்களுக்கு மெய்ஞ்ஞான புத்திரியொன்றை அருளினார். நீங்களோ அஞ்ஞானந்தகார ஐசுவரிய புருடனைத் தேடி மணஞ்செய்யத் துணிந்தீர்கள். "பணத்தையல்லக் குணத்தைப் பார்" என்னும் முதுமொழியை மறந்துவிட்டீர்களா? எண்ணெயுடன் தண்ணீர் சேருமா? அவளுக்கது தகாதிருந்தது, ஆதலால் ஈஸ்பரன் அவளைத் தெய்வலோகத்துக்கழைத்து முன் சுபசெய்தியைத் தெரிவிக்கவந்தனாகிய என்னையே தெரிந்து வதுவை செய்திருக்கிறார். நாங்கள் அங்கே சுகசேமமாய் வாழுகிறோம். இருக்குமிடத்திலிருந்தால் துரும்பும் வற்றப்பெறும். நீங்களும் எங்களைவந்து சந்திக்குநாளும் வரும். அப்போது கூடிக்குலாவி உல்லாச கொண்டாட்டக் களியாட்டில் பொழுதுபோக்கலாம். அத்தருணத்திலே முன்பூண்ட உடையணிகளை வைத்திருப்பது உங்களுக்கும் விருப்பமாயிருக்கும். ஆதலால் அவள் தனது உடையணிகளை வாங்கிவரவும் தனது சுகக்ஷேமங்களைத் தெரிவிக்கவும் என்னையனுப்பினாள். பயப்படாதே எழுந்து இனிச் சந்தோஷமாயிரு அம்மா என்றான். அதைக்கேட்ட சோமநாதபிள்ளைமனைவி ஆனந்த பரவசமாகிக் கடலிலாழ்பவனுக்கோர் மிதவை கிடைத்தாற்போலச் சந்துஷ்டியடைந்து தன்மகளின் சுகசேமங்களைக் குறித்துப்பல கேள்விகளைக் கேட்டாள். சற்றுநேரம் உட்காரும்படி வேண்டிக்கொண்டாள். சுந்தரனே "இருட்டு வீட்டிற்போனால், திருட்டுக்கைநிற்குமா" என்றபடி கிடைத்த தருணத்தைக் கைவிடாமல் சொல்லுகிறான்; அடீ அம்மா அவள் என்னைக் கணமேனும் பிரிந்திருக்க மனமற்றிருக்கிறாள். உடனேவந்து கலியாண சோபன செய்தியறிவிக்கவும் அதே தடையாயிருந்தது. உங்கள் சுகசேமங்களை விரைவில்வந்து சொல்லும்படியே என்னையனுப்பினாள். நான் தாமதிக்கலாகாது. நீங்கள் சுகமாயிருக்கிறீர்களென்ற செய்தியை நான் உடனே போய் அறிவிக்க வேண்டும். நீங்கள் தயவுசெய்து அவளுக்குத் தருகிறதைத் தந்தனுப்புங்கள். மறுபடி சுகசெய்தியுடன் ஒருமுறை வருவேனென்று சொல்லி "எருதுக்குந்தன் புண்ணழர்ச்சி காக்காய்க்குந் தன் பசியழர்ச்சி" என்றாற்போலப் புறப்படத் தீவிரித்தான். அதைக்கண்ட சோமநாதபிள்ளைமனைவி மகளணிந்த நகைகளையும் ஆடையாபரணங்களையும் மூட்டையாய்க்கட்டி அவன்கையிலொப்புவித்து இன்னொருமுறை வருகையில் பிள்ளையையுங்கூட்டி வரப்படாதா என்றாள். அதற்கவன் ஈஸ்பரனுத்தரவில்லை, ஆயினும் பார்ப்போம் போய்வருகிறேனென்று துரிதமாயெழுந்து சென்று ஓர் மறைவிடந்தேடித் தன் வேஷத்தை மாற்றிக்கொண்டு ஓடிப்போனான். போகும்போது "அஞ்சினவன்கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பிசாசு" என்பதுபோல வழியில் எவரைக்காணினுந் திடுக்கிட்டும் அங்கிங்கு திரும்பிப்பார்த்துக்கொண்டும் போனான். போகையில் ஓ! இவ்வளவில் விட்டுவிட்டு வந்துவிட்டேனே! "பதறுதகாரியம் சிதறுது" என்றபடி மனம்பதறாமல் காரியம் பார்த்தால் இன்னும் எவ்வளவோ லாபம் பெறலாமே என்னும் அவா அவனுள்ளத்தைக் கொள்ளைகொண்டது. ஆயினும் "கரும்பினியதென்று வேரோடு தின்னலாமா" போனது போகட்டுமென்று தன்மனதைத் தேற்றிக்கொண்டு தன் அதிஷ்டத்தையும் சோமநாதபிள்ளை மனைவியின் மௌடீகத்தையும் நினைத்துத் தன் கெட்டித்தனத்தை மெச்சிக்கொண்டு போனான். சோமநாதபிள்ளை மனைவியோ ஆனந்தசாகரத்துளமிழ்ந்தித் தலைவன்வரவை ஆவலாய் எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்.

### சோமநாதபிள்ளையும் கூட்டாளிகளும் சுந்தரனைத்தொடரல்.

சோமநாதபிள்ளை மனைவி கணவன் வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருந்தவள் அவர் வருகையை யறிந்தவுடனே படலைக்கு ஓடி, அங்கு மிகு முகமலர்ச்சிகாட்டி நின்றாள். சோமநாதபிள்ளையோ! இதேது? மகள் இறந்தநாள் முதலாய்த்துக்க சாகரத்தமிழ்ந்திக்குறுவினமுகத்துட னிருந்தவளுக்கு இன்றுவந்த சந்தோஷம் எதன்னிமித்தமோ என்றறிய மிகு ஆவலாயிருந்தார். உடனே மனைவியானவள் "கெட்டீரே பிள்ளையின் புருஷன் வந்துபோகிறார்" என்று சொல்லிச் சிரித்தாள். இதைக்கேட்ட சோமநாதபிள்ளை மயக்கமுற்று ஒரார்த்தமுந் தெரியாமல் மலைத்துநின்று "அதார் பிள்ளையின் புருஷன்" என்றார். அதற்கு மனைவி "அவளைத் தேவலோகத்தில் மணஞ்செய்திருக்கும் மருமகன் அவர்தானே, முந்திவந்த சாமியார் வந்துபோகிறார்; அவள் நல்ல சந்தோஷமாயிருக்கிறாளாம், சிலவேளை கூட்டியும் வருகிறேனென்றார்" என்றாள். அதைக்கேட்ட சோமநாதபிள்ளை திகைத்தும்ஆத்திரப்படாமல்"பதறுதகாரியம்சிதறுது"என்றபடி இப்பேதையை ஆரோ மயக்கிவிட்டான்போலும்! முன்னும் இவளது அவநம்பிக்கையில் நானுமிசைந்தேன்! இப்போது பார்க்கும்போது"ஆத்திரகாரனுக்குப்புத்திமட்டு"என்றபடி இவள் தந்திரிகளின் நயவசனங்களுக்கு எடுபட்டு மோசம்போகிறாளென்று நினைத்து அவளைநோக்கி நீ அவருக்கு என்னகொடுத்தாய் என்றார். பிள்ளையின் நகைகள் உடைகளையெல்லாம் வாங்கிவரும்படி பிள்ளை சொன்னதென்றார்; நான் எல்லாவற்றையுங் கொடுத்துவிட்டேனென்றாள். சோமநாதபிள்ளையோ திடுக்கிட்டு "இடங்கண்டால் விடுவானா யாழ்ப்பாணத்தா"னென்றுன்னி அவர் எங்கே போகிறார் என்றார். அதற்கு மனைவி வடதிசையாய்ப் போகிறார் என்றாள். போய் எவ்வளவுநேரம் இருக்குமென்றார். சற்றுநேரத்துக்குமுன்தான் போகிறார் என்றாள். நான் வருமளவும் நீயேன் அவரை மறித்துவைக்கவில்லையென்றார். அவசரத்தில்வந்தவர் நிற்பாரா? நீர் உடனே வருவீரென்று எனக்குத் தெரியுமா என்றாள். உடனே சோமநாதபிள்ளை எழுந்து "இழந்தநேரம் திரும்பவாரது" என்றெண்ணி அடலிலிருந்த பண்டாரம் கார்த்திகேசு, வயிரவிப்பிள்ளை என்பவர்களைத் தனியே அழைத்துப்போய் என்மகளின் உடைமைகளையெல்லாம் ஒருவன் என் மனைவியை ஏய்த்து வாங்கிக்கொண்டு வடமுகமாய்ப் போகிறானாம். அவனைப் பிடிக்கவேண்டும் வாருங்களென்றார். அவர்களில் வயிரவிப்பிள்ளை கீழ்த்திசையாலும் பண்டாரம் மேற்றிசையாலும் கார்த்திகேசு நடுத்தெருவாலும் ஓடிப்போகத் தலைப்பட்டார்கள்.

(தொடரும்)

## கோதூளிகா லக்கினம்

செங்கதிர்மேல்பாற்சென்று
  செஞ்சுடர்விசயம்வாரி
தங்கியவேலைதன்னைத்
  தக்கசோதூளியென்பர்
அங்கதிற்செள்ளமுஞ்சி
  யருமணமன்றியாவும்
மங்கையேசெய்யலாகும்
  என்றனர்மறைவல்லோரே.

(இ--ள்.) சூரியாஸ்தமய காலத்திற்குக் கோதூளிகாலக்கினம் அல்லது கோதூளிகா சமயமென்று பெயர் இதன்பொருளென்னையெனில்? சூரியகிரணசமூகங்கள் மேற்குத் திசையில் மிகுந்த சிவப்புநிறமாகக் காணப்படுஞ் சமயத்தில் காட்டில் மேயப்போன பசுக்கூட்டங்கள் புல் பூண்டாதி மூலிகைகளை மேய்ந்து வீட்டிற்குத் திரும்புந் தருணத்தில் அவற்றின் கால்களிலிருந்து தூகள்கள் எழும்புங் காலமாதலால் கோதூளிகா காலமென்று கூறப்படும்.

இந்தக்காலம் மூவகைத்தாம். அஃதாவது:—மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் சூரியமண்டலம் மேற்கில் ஒளிகுறைந்து காணப்படுஞ் சமயமும், ஆனி, ஆடி, மாதங்களில் சூரியமண்டலம் மேற்கே பாதிமறைந்து காணப்படுஞ் சமயமும், சித்திரை, வைகாசி மாதங்களில் சூரிய மண்டலம் காணாமல் மறைந்துபோகுஞ் சமயமும், ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் சூரியன் அஸ்தமிக்கத்தொடங்குஞ் சமயமும் கோதூளிகா சமயமென்று கூறப்பட்டிருக்கிறது.

கிழக்குத்தேசத்திலுள்ளவர்கள், கலிங்கதேசத்தவர்கள் மாத்திரம் கோதூளிகாகாலம் விவாகத்திற்கு உத்தமமென்றும், ஏனைய தேசவாசிகட்கு விவாகத்திற்கு உசிதமல்லவென்றும் அறியக்கிடத்தலின் சமசோதிமாலையில் பொதுவாகக் கூறியிருக்கிறது.

எவர்களாயிருந்தாலும் தமது கருமங்களை அவசியமாகச் செய்ய வேண்டின். கோதூளிகா காலத்திற் செய்யலாம். சூத்திரர்கள் இக்காலத்தில் விவாகஞ்செய்யலாமென்றும், மூவருணத்தாரும் செய்யக்கூடாதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

திதி, நட்சத்திரம், பொருந்தாதபோதும் சந்திரபலம், தாராபலம் இல்லாதபோதும் அவசியம் பிரயாணஞ்செய்ய நேர்ந்தால் உஷக்காலத்திலும், கோதூளிகா காலத்திலும் பிரயாணஞ்செய்யலாம். கோதூளிகா காலத்தில் மேற்குத் திக்கிலும் உஷக்காலத்தில் கிழக்குத்திக்கிலும் இராத்திரி காலத்தில் வடக்குத் திக்கிலும் பிரயாணஞ் செய்யக்கூடாதென்றறிக. கோதூளிகா காலத்தில் மேற்குத்திக்குத் தவிர ஏனைய திக்குகளில் பிரயாணஞ்செய்தால் இஷ்டசித்திகளுண்டாம்.

மார்கழி, மாசி மாதங்களில் கோதூளிகாலம் குற்றமுடைத்தாம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சதுமலை

## சந்தா விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.
இலங்கை, இந்தியாவுக்கு ரூபா 2½
மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5.

## விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.
சிறு விளம்பரங்களுக்கு ரூபா 1¼
கலம் ஒன்றுக்கு ரூபா 3

## சந்ததி தழைக்குந் தருமம்

1925-ம் ஆண்டுக்குமுன்பு கதிர்காமக்ஷேத்திரத்தைத் தரிசிக்க வந்தவர்களில் பத்து இருபது பேர் வரையில் கதிரைமலையைத் தரிசிக்கக் காட்டுமார்க்கமாகப்போய்ச் சிலர் செத்தார்கள்; சிலர் காட்டில் அலைந்து திரிந்து நாலைந்து நாட்களின் பின் வந்தார்கள் என்பதை நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள்; நானும் கேள்விப்பட்டேன். இதைவிட எனக்குத் தெரியக்கூடியதாக அநேகர் காட்டில் அந்தரித்துக் காணப்படாமற் போய்விட்டார்கள். இதை அறிந்த நாட் தொடக்கம் நான் மாணிக்ககங்கைக் கரையிலிருந்து கதிரைமலைச் சிகரம் வரையும் ஒரு தெரு வெட்டவேண்டுமென்று எம்பெருமானிடம் 13 வருடகாலமாக வேண்டுதல் செய்தேன். 1927-ம் ஆண்டு பெருமான் விடை அளித்தார். பின்னர் நான் வதுளை கவர்ன்மென்ற் ஏஜன்ற் திரு. E. T. மிலிங்டன் அவர்களுடைய உத்தரவைப் பெற்று மாணிக்ககங்கைக் கரையிலிருந்து கதிரைமலைச் சிகரம் வரையும் புது றோட்டு வெட்டித் திருத்தி இருப்பது நீங்கள் எவர்களும் அறிந்த விஷயம். விவேகானந்த மடத்திலிருந்து தண்ணீர் வார்க்கத் தொடங்கினேன். இத்திவ்விய திருத்தொண்டு தவறாது சதாகாலமும் நிலைக்கக்கூடியதாகச் செய்வது அறிவுள்ளோர்களாகிய உங்கள் கடமை. உங்களில் அனேகர் பணத்தை மடைமைத் தன்மையாலோ, அறிவீனத்தன்மையாலோ அடாத்தான அதர்மமான வழிகளில் எறிந்துவிடுகிறார்கள். இதனை விடுத்து, இறுதிக்காலத்தும் உறுதியான புண்ணியத்தைத் தேடும்படி அவர்களுக்கு அறிவூட்டி ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு உண்டியல் வைத்து அதில் பணத்தைச் சேகரித்தோ அல்லது யாசகஞ்செய்தோ தருவீர்கள் என்று எமபெருமானைத் துதிக்கின்றேன்.

கீழ்க்காணும் விலாசத்துக்குப் பணத்தை அனுப்பிவைக்கவும்.

இங்ஙனம்
உங்கள் தொண்டனாகிய
ரமண—சங்குசாது,
கதிரைமலை,
திசைமாறும போஸ்டு.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா" விலுள்ள ஆனந்தகுமாரன் அச்சுநிலையத்தில் 1938-ம் வருஷம் புரட்டாதிமீ 20-ந்திகதி செவ்வாய்க்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.